ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1684 - 2010 දෙසැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2010.12.10

*1684 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 1910 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1916 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | 1912 | ஏல விற்பனைகள் | 1920 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2011

பிரதேச நிலஅளவை அலுவலகத்திற்கு கட்டிடங்களை முறையே இரண்டு வருட காலத்திற்கும் ஒரு வருட காலத்திற்கும் பெற்றுக்கொள்வதற்கு விலைகோரல்கள் தென் மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில் 2010.12.24 அன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு விலைகோரல்கள் அதே தினம் பிற்பகல் 2.05 மணிக்கு திறக்கப்படும்.

விலைகோரல் விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் தென் மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்திலும் காலி, மாத்தறை ஆகிய மாவட்ட நிலஅளவை அலுவலகங்களிலும் அலுவலக நேரத்தில் மீளளிக்கப்படாத பணமாக ரூபா 250 ஐச் செலுத்தி 2010.12.23 ஆந் திகதியன்று நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும்.

| மாகாணம் | மாவட்டம் | மாவட்ட நில அளவை அலுவலகம் | விலைகோரல் விபரங்களும் விண்ணப்பப்படிவங்களும் பெறப்படும் இடம் | விலைகோரல்கள் விண்ணப்பம் ஏற்கும் இடம் |
|---|---|---|---|---|
| தென் மாகாணம் | மாத்தறை | மாத்தறை | தென் மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில், மாத்தறை மாவட்ட நிலஅளவை அலுவலகங்களிலும் | தென் மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில், பஹல டிக்சன் பாதை, காலி |
| தென் மாகாணம் | மாத்தறை | கம்புறுபிட்டிய | தென் மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில், மாத்தறை மாவட்ட நிலஅளவை அலுவலகங்களிலும் | தென் மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகத்தில், பஹல டிக்சன் பாதை, காலி |

முத்திரையிடப்பட்ட விலைகோரல்கள் விண்ணப்பம் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் ''பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெறுதல் - (இடத்தின் பெயர்)'' என்ற வாசகம் பொறிக்கப்பட்டு நேரடியாக கையளிக்க முடியும் அல்லது பதிவுத்தபாலில் மாகாண நிலஅளவையாளர் நாயகம், மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம், பஹல டிக்சன் பாதை, காலி என்ற முகவரிக்கு 2010.12.24 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு தேவையான விபரங்களுடன் அனுப்பிவைக்க வேண்டும்.

நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம்.
இல. 150, கிருல வீதி,
கொழும்பு 5.

*12-168*

---

**இலங்கை புகையிரத சேவைகள்**

கொள்வனவு அறிவித்தல்

**இலங்கை புகையிரத சேவைகளுக்கு 150 மெ. தொ. எடையுள்ள கடின வார்ப்பிடச்சாலை சுட்டநிலக்கரியை வழங்கலுக்கான கொள்வனவு**

**கொள்வனவு இல. எஸ்ஆர்எஸ்/எப்.6843**

1. இலங்கை புகையிரத சேவைகளுக்கு 150 மெ. தொ. எடையுள்ள கடின வார்ப்பிடச்சாலை சுட்ட நிலக்கரியை கொள்வனவு செய்வதற்காக தயாரிப்பாளர்கள்/வழங்குநர்களிடமிருந்து முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை, இலங்கை, கொழும்பு, அ. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை, புகையிரத தலைமைக் காரியாலயம், இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்கள கொள்வனவுக் குழுத் தவிசாளர் பெற்றுக்கொள்வார்.

2. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளுதல் முடிவடையும் திகதி 2010.12.16 ஆந் திகதி (இலங்கை நேரப்படி) பிற்பகல் 2.00 மணியாகும்.

3. மீளளிக்கப்படாத கொள்வனவுக் கட்டணம் 2,500 ரூபாவை அல்லது இலகுவில் மாற்றத்தக்க நாணயத்தில் அதற்குச் சமமான தொகையைச் செலுத்துவதன் மேல் 2010.12.13 ஆந் திகதியன்று பி. ப. 2.00 மணி (இலங்கை நேரம்) வரையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியங்கள் சுப்ரிண்டன் அவர்களின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத்

தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடிய படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, இலங்கை புகையிரத சேவைகள், புகையிரத தலைமை அலுவலகத்தில் வைத்து விலைமனுக்கள் ஏற்கப்படும். நேரம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறந்து பார்க்கப்படும்.

5. முத்திரைக் குறி இடப்பட்ட விலைமனுக்கள் பதிவஞ்சல் மூலம் அனுப்பவேண்டிய அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டிய முகவரி வருமாறு :-

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமை அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை கட்டணமின்றி இலவசமாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்களின் சுப்ரிண்டன் அலுவலகத்தில் பார்க்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும் :

சுப்ரிண்டன் - புகையிரத களஞ்சியங்கள்,
புகையிரத களஞ்சியங்கள் திணைக்களம்,
அ. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044 அல்லது 94 (11) 2436818.
தொலைநகல் இல. : 94 (11) 2432044
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. : எஸ்.ஆர். எஸ்./எப்.6843.

12-224

---

## இலங்கை புகையிரத சேவை

### இலங்கை புகையிரத சேவைகளுக்கு 200 இரும்புச் சக்கரங்களை வழங்கல் செய்வதற்கான கொள்வனவு

1. இலங்கை புகையிரத சேவைக்கு 200 எண்ணிக்கை கொண்ட இரும்புச் சக்கரங்களை வழங்கல் செய்வதற்காக உற்பத்தியாளர் களிடமிருந்தும்/வழங்குநர்களிடமிருந்தும் முத்திரை குறியிடப்பட்ட விலைமனுக்களை, இலங்கை, கொழும்பு, அ. பெ. இல. 355, புகையிரத தலைமை அலுவலகம், இலங்கை புகையிரத சேவைகளின் திணைக்கள குழுத் தலைவர் பெற்றுக்கொள்வார்.

2. விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் பணி 2010, திசெம்பர் 22 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு முடிவடையும்.

3. மீளளிக்கப்படாத கொள்வனவுக் கட்டணம் 2,500 ரூபாவை அல்லது இலகுவில் மாற்றத்தக்க நாணயத்தில் அதற்குச் சமமான தொகையைச் செலுத்துவதன் மேல் 2010.12.17 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணி (இலங்கை நேரம்) வரையில் கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரதக் களஞ்சியங்கள் சுப்ரிண்டன் அவர்களின் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களிலிருந்து பெறப்படக்கூடிய படிவங்களில் மட்டுமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

4. இலங்கை, கொழும்பு 10, புகையிரத தலைமை அலுவலகத்தில் வைத்து விலைமனுக்கள் ஏற்கப்படும். விலைகூறுநர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கப்படும்போது சமுகமாயிருக்கும்படி கோரப்படுகிறார்கள். நேரம் முடிவடைந்த உடனடியாகவே அவை திறந்து பார்க்கப்படும்.

5. முத்திரைக் குறி இடப்பட்ட விலைமனுக்கள் பதிவஞ்சல் மூலம் அனுப்பவேண்டிய அல்லது நேரில் ஒப்படைக்க வேண்டிய முகவரி வருமாறு :

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமை அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. விலைமனு ஆவணங்களை கட்டணமின்றி இலவசமாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சியங்களின் சுப்ரிண்டன் அலுவலகத்தில் பார்க்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து தொடர்புகொள்ளவும் :

சுப்ரிண்டன் - புகையிரத களஞ்சியங்கள்,
புகையிரத களஞ்சியங்கள் திணைக்களம்,
அ. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044 அல்லது 94 (11) 2430818.
தொலைநகல் இல. : 94 (11) 2432044
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. : எஸ்.ஆர். எஸ்./எப்6845.

12-225

**இலங்கை புகையிரத சேவை**

கொள்வனவு அறிவித்தல்

**இலங்கை புகையிரத சேவைகளுக்கு 20,000 குறைந்த உராய்வுள்ள சிந்தெட்டிக் பிரேக் புளொக்குகளை வழங்குவதற்கான கேள்வி**

1. இலங்கை புகையிரத சேவைக்கு 20,000 குறைந்த உராய்வுள்ள சிந்தெட்டிக் பிரேக் புளொக்குகளை வழங்குவதற்கான பொறியிடப்பட்ட கேள்விகள், கொழும்பு, த. பெ. இல. 355, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் தலைமையகம், இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் கமிட்டித் தலைவரால் கோரப்படுகின்றன.

2. 2010.12.09 ஆந் திகதி பி. ப. 2.00 மணிக்கு (இலங்கை நேரம்) கேள்விகள் மூடப்படும்.

3. மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக 2,500 ரூபாவை அல்லது அதற்குச் சமமான இலகுவாக மாற்றக்கூடிய கரன்ஸி மூலமாக 2010.12.07 ஆந் திகதியன்று பி. ப. 3.00 மணிவரை செலுத்தி (இலங்கை நேரம்) இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்திலிருந்து அல்லது வெளிநாட்டில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்திலிருந்து பெற்றுக்கொண்ட படிவங்களில் கேள்விகளைச் சமர்ப்பிக்க வேண்டும்.

4. இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத சேவைகள் தலைமையகத்தில் கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும்போது கேள்விதாரர்கள் அல்லது அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

5. பொறியிடப்பட்ட கேள்விகளை பதிவுத்தபால் மூலம் கீழ்க்கண்ட விலாசத்துக்கு அனுப்பவேண்டும் அல்லது நேரில் கையளிக்கலாம் :

தலைவர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்,
புகையிரத தலைமை அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.

6. கேள்விப்பத்திர ஆவணங்களை கட்டணமின்றி இலவசமாக இலங்கை, கொழும்பு 10, ஒல்கொட் மாவத்தை, புகையிரத களஞ்சிய அத்தியட்சகர் அலுவலகத்தில் பரிசீலிக்கலாம்.

7. மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் முகவரியில் தொடர்புகொள்ளவும் :

புகையிரத களஞ்சிய அத்தியட்சகர்,
புகையிரத களஞ்சிய திணைக்களம்,
த. பெ. இல. 1347, ஒல்கொட் மாவத்தை,
கொழும்பு 10,
இலங்கை.
தொலைபேசி இலக்கங்கள் : 94 (11) 2432044 அல்லது 94 (11) 2430818.
தொலைநகல் இல. : 94 (11) 2432044
இணையத்தளம் : www.railway.gov.lk

தவிசாளர்,
திணைக்கள கொள்வனவுக் குழு,
இலங்கை புகையிரத சேவைகள்.

தொடர்பு இல. எஸ்ஆர்எஸ்/எப்.6844

12-226

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதி அமைச்சு**

பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்களின் ஏலவிற்பனை

நீதி அமைச்சுக்குச் சொந்தமான பாவனையிலிருந்து அகற்றப்பட்ட பொருட்கள் 2010.12.23 மற்றும் 24 ஆந் திகதிகளில் மு. ப. 9.30 மணிக்கு கொழும்பு 12, நீதி அமைச்சு வளவில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

**நிபந்தனைகளும் விதிகளும் :**

1. ஏலம் ஆரம்பிப்பதற்கு 1/2 மணித்தியாலத்திற்கு முன்னர் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ள பொருட்களை பொதுமக்களுக்கு பரீட்சித்துப் பார்க்க முடியும்.
2. ஏலத்தில் கொள்வனவு செய்யும் பொருட்களுக்காக அந்நேரத்திலேயே பணம் செலுத்தப்பட வேண்டு மென்பதுடன், அதற்கான பற்றுச்சீட்டை பாதுகாப்புப் பிரிவிடம் சமர்ப்பித்து அத்தினத்திலேயே பி. ப. 4.00 மணிக்கு முன்னர் அப்பொருட்கள் அலுவலக வளவிலிருந்து அகற்றிக்கொள்ளப்பட வேண்டும்.
3. அமைச்சினால் விதிக்கப்படுகின்ற ஆகக்குறைந்த விலைகூறல் ஏற்றுக்கொள்ளப்படாத சந்தர்ப்பமொன்றில் அமைச்சின் தற்றுணிபின்படி அப்பொருட்களை ஏலத்திலிருந்து அகற்றிக்கொள்ளும் உரிமை அமைச்சுக் குரியதாகும்.
4. ஏலத்தில் பொருட்களைக் கோருவதற்கு வருகை தருபவர்களை தமது தேசிய ஆளடையாள அட்டையைச் சமர்ப்பிக்க வேண்டும்.
5. ஏலம் தொடர்பில் முறைப்பாடுகள் எவையேனும் இருப்பின், ஏலம் நடைபெறும்போதே சமர்ப்பிக்க வேண்டுமென்பதுடன் பின்னர் கிடைக்கும் முறைப்பாடுகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

6. ஏலத்தில் தீர்ப்புச் செய்யப்பட்ட பொருட்கள் எக்காரணத்தைக் கொண்டும் மீள ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. இந்த ஏலத்தின் எல்லா உரிமைகளும் நீதி அமைச்சுக்குரிய தாகும்.

8. இது தொடர்பாக மேலும் விபரங்கள் அவசியமாயின் "தொலைபேசி இல. 011-2329100, கணக்காளர்-வழங்கல்" இடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

ஏலத்திற்குரிய பொருட்கள் லொட் இல. 1 முதல் 141 வரை வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் அட்டவணையின்கீழ் தரப்பட்டுள்ளது.

சுகத கே. கமலத்,
செயலாளர்,
நீதி அமைச்சு.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
2010.11.25.

**அட்டவணை**

| லொட் இல. | பொருள் | வகை/மாதிரி | தொடர் இலக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 A | Photocopy Machine | Canon GP 160 | | 01 |
| 01 B | Photocopy Machine | Canon GP 160 | | 01 |
| 02 | Photocopy Machine | Konica 3231 | | 01 |
| 03 | Photocopy Machine | Konica 3231 | | 01 |
| 04 | Photocopy Machine | Canon NP 1215 | PBK449002 | 01 |
| 05 | Photocopy Machine | Konica 1216 | 12GS41385B | 01 |
| 06 | Printer | Canon NP 1215 | | 01 |
| 07 | Printer | Laser jet HP 1100 | SGDB079122 | 01 |
| 08 | Printer | Laser jet HP 1100 | FRGR139380 | 01 |
| 09 | Printer | Laser jet HP 1150 | CNCJ245496 | 01 |
| 10 | Printer | Lexmark Z705 | 01200237644 | 01 |
| 11 | Printer | Lexmark Z705 | 01200237647 | 01 |
| 12 | Printer | Lexmark Z45 | 06250514957 | 01 |
| 13 | Printer | Epson LQ 2080 | BJ2Y028652 | 01 |
| 14 | Printer | Epson LQ 2080 | BJ2Y028785 | 01 |
| 15 | Printer | Lexmark E 120 | 9942V50 | 01 |
| 16 | Printer | Lexmark E 312 | 6025827 | 01 |
| 17 | Printer | Lexmark C 510 | 5805PM3 | 01 |
| 18 | Printer | Lexmark Optra + | 11DL905 | 01 |
| 19 | Printer | Lexmark IBM 2391 | 11-36350 | 01 |
| 20 | Printer | Lexmark E312 | 6025756 | 01 |
| 21 | Printer | LQ 2170 | 2WUV015205 | 01 |
| 22 | Monitor | Daewoo | WH93C00221 | 01 |
| 23 | Monitor | NEC | 9402116YA | 01 |
| 24 | Monitor | Siemens | YEPE578923 | 01 |
| 25 | Monitor | Siemens | YEPF588713 | 01 |
| 26 | Monitor | Siemens | YEPF588849 | 01 |
| 27 | Monitor | IBM | 66BGV11 | 01 |
| 28 | Monitor | Acer | 9171602303 | 01 |
| 29 | Monitor | IBM | 23 LBYD3 | 01 |
| 30 | Monitor | Siemens | YEPF 587572 | 01 |
| 31 | Monitor | Dell | 0724JR | 01 |
| 32 | Monitor | Acer | 9171602303 | 01 |
| 33 | CPU | Siemens | YBTM790351 | 01 |
| | Key Board | | | 02 |
| | Mouse | Siemens | | 01 |

| லொட் இல. | பொருள் | வகை/மாதிரி | தொடர் இலக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 34 | CPU | IBM | L3EMK56 | 01 |
| | Key Board | IBM | | 01 |
| | Mouse | | | 02 |
| 35 | CPU | IBM | BN1H56K | 01 |
| | Key Board | IBM | | 01 |
| | Mouse | | | 01 |
| 36 | CPU | Acer | U080497 | 01 |
| | Key Board | Acer | | 02 |
| | Mouse | | | 02 |
| 37 | CPU | Acer | U474909 | 01 |
| | Key Board | Acer | | 01 |
| | Mouse | | | 01 |
| 38 | CPU | Siemens | YBTM890524 | 01 |
| | Key Board | Dell | | 01 |
| | Mouse | | | 01 |
| 39 | CPU | IBM | BN1MCYB | 01 |
| | Key Board | IBM | | 02 |
| | Mouse | | | 01 |
| 40 | CPU | IBM | 90A9XB7 | 01 |
| | Mouse | | | 02 |
| | Key Board | IBM | | 01 |
| 41 | CPU | | Datamini | 01 |
| | Mouse | | | 02 |
| | Key Board | DELL | | 01 |
| 42 | UPS | | YH437100160 | 01 |
| 43 | UPS | Power Tree | PT0512ME800432 | 01 |
| 44 | UPS | Power Tree | PT0512ME800889 | 01 |
| 45 | UPS | Power Tree | PT0512ME800854 | 01 |
| 46 | UPS | DCP 600 | 436826114 | 01 |
| 47 | UPS | 650 VA | 0305060799 | 01 |
| 48 | UPS | Patriot 400 | 193PF47113 | 01 |
| 49 | UPS | Long Time | 9993167 | 01 |
| 50 | UPS | DCP 600 | 434826108 | 01 |
| 51 | Screen Filter | | | 11 |
| 52 | Speaker Set | | | 01 |
| 53 | Toner | Lexmark C 510 | | 01 |
| 54 | Toner | Canon NP 1010 | | 01 |
| 55 | Toner | 6016 BK | | 01 |
| 56 | Toner | Canon NP 7160 | | 02 |
| 57 | Toner | Mita DC 2055 | | 01 |
| 58 | Toner | Sharp SF 7805T1 | | 06 |
| 59 | Toner | Xerox 1025 | | 01 |
| 60 | Toner | Toshiba T 3560 | | 01 |
| 61 | Ribbon | LQ 1010 | | 01 |
| 62 | Ribbon | Star N 15 | | 01 |
| 63 | Photo Conductor Unit | Lexmark Optra E | | 01 |
| 64 | Fax Machine | Canon B 155 | H 12163 | 01 |
| 65 | Fax Machine | Canon B 150 | H 12099 | 01 |
| 66 | Fax Machine | Panasonic KX - F50 | SDBHH255557 | 01 |
| 67 | Fax Machine | Panasonic Digital | 81AHC608323 | 01 |
| 68 | Fax Machine | Canon B 820 | H12414 | 01 |
| 69 | Fax Machine | MURATA F-30 | 00004006 | 01 |
| 70 | Fax Machine | Sagem | 6019551 | 01 |
| 71 | Fax roll | (210x50) | | 25 |
| 72 | Binding Machine | IBICO | 016586 | 01 |
| 73 | Roneyo Machine | Gestetner 4130 | | 01 |
| 74 | Roneyo Machine | Gestetner 4130 | | 01 |

| லொட் இல. | பொருள் | வகை/மாதிரி | தொடர் இலக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 75 | Phone - Mobile | Nokia 2760 | 357662/01/486870/3 | 01 |
| 76 | Phone - Mobile | Nokia 2760 | 359818/01/400453/7 | 01 |
| 77 | Phone - Mobile | Nokia 1208 | 358096/01/725177/4 | 01 |
| 78 | Phone - Cordless | | | 01 |
| 79 | Phone - Normal | | | 31 |
| 80 | AC Out Door Unit | LG | | 01 |
| 81 | AC in Door Unit | Mitsubishi | | 01 |
| 82 | Fridge-Table Model | Samsung | | 01 |
| 83 | Fan - Table | Yunas | | 01 |
| 84 | Filter - Water | | | 02 |
| 85 | Kettle | electrical | | 11 |
| | Kettle | Normal | | 01 |
| 86 | Boiler - Water | | | 01 |
| 87 | Sinning Machine | | | 01 |
| 88 | Lamp Table | | | 02 |
| | Tube bulbs set | | | 01 |
| 89 | Bell - Calling | (electric) | | 02 |
| 90 | Flask | | | 01 |
| 91 | Jug | (Aluminum) | | 03 |
| 92 | Brief Case | | | 03 |
| 93 | Bag - Filling | (leather) | | 03 |
| 94 | Porcelain | Saucer, Plate Creamer, Cup Tea pot, Jug | | |
| 95 | Clock | | | 14 |
| 96 | Stapler Machine | | | 09 |
| | Puncher | | | 05 |
| | Scissors | | | 03 |
| 97 | Calculator | | | 08 |
| 98 | Seal Rack | | | 01 |
| | Pins Tray | (wood) | | 02 |
| | Pins Tray | (Glass) | | 01 |
| 99 | File Tray | (wood) | | 10 |
| | File Tray | (Plastic) | | 01 |
| 100 | Paper cutter | | | 01 |
| 101 | Fan table | | | 01 |
| | Extension code | | | 01 |
| 102 | Fan - stand | | | 01 |
| | Extension code | | | 02 |
| 103 | Deck V.H.S. | Panasonic | L3TB01835 | 01 |
| 104 | Paper Shredder | Rexel | R40-66460 | 01 |
| 105 | Video Cassette Recorder | SONY | 0157817 | 01 |
| 106 | Camera | Kodak | | 01 |
| 107 | Tender Box - Small | | | 01 |
| | Tender Box - Large | | | 01 |
| | Box - Tender | (wood) | | 01 |
| 108 | Sofa Single Sweater | | | 14 |
| 109 | Table | (Fiber) | | 02 |
| 110 | Table computer | | | 09 |
| 111 | Chair computer | | | 10 |
| 112 | Table - KKS | (steel) | | 01 |
| | Chair | (Plastic/Steel) | | 01 |
| 113 | Table - EX. | (steel) | | 02 |
| | Chair | (Steel) | | 01 |
| 114 | Table - Normal | (wood) | | 02 |
| 115 | Cabinet # Filling (4 drawer) | | | 08 |
| 116 | Chair | (Fiber) | | 53 |
| 117 | Chair - arm | (wood) | | 06 |

| லொட் இல. | பொருள் | வகை/மாதிரி | தொடர் இலக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 118 | Chair - Ex. | | | 07 |
| 119 | Chair - arm | (Cane) | | 02 |
| 120 | Chair - Typist | (wood) | | 02 |
| 121 | Chair - Visitors | (wood) | | 03 |
| 122 | Chair - normal | (wood) | | 03 |
| 123 | Chair (Cushion) | | | 02 |
| 124 | Gang Chair - arm | (wood) | | 01 |
| | Gang Chair | (wood) | | 01 |
| 125 | Cupboard | (Steel) | | 01 |
| 126 | Almirah | (wood) | | 01 |
| 127 | Almirah - Glass Fronted | (wood) | | 01 |
| 128 | Security Gate | | | 01 |
| 129 | Tray | (Plastic) | | 01 |
| | Tray | (silver) | | 03 |
| 130 | White Board | | | 02 |
| 131 | Tyre | | | 68 |
| 132 | Spare Parts (Vehicle) | | | |
| 133 | Colour Pencil | | | 300 |
| 134 | Notice Board | (wood) | | 01 |
| | Stool | (wood) | | 02 |
| | Dustbin | (wood) | | 01 |
| | Flag stand | | | 01 |
| | Rack - Letter | (wooden) | | 01 |
| 135 | Court hanger | (wooden) | | 01 |
| | Court hanger | (Steel) | | 01 |
| 136 | News Papers | | | |
| 137 | Chair - Visitors | (Steel) | | 01 |
| | Chair Visitors | | | 07 |
| 138 | Table - KKS | (wooden) | | 03 |
| 139 | Table - EX | (wooden) | | 01 |
| | Mic Stand | | | 01 |
| 140 | Reception Counter | (MDF) | | 01 |
| 141 | Flash Card | | | 01 |
| | Modem | | | 01 |

12-376

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-*

*கம்பனியின் பெயர் :* விஸ்டா கெப்பிட்டல் (பிறைவேட்) லிமிடெட்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* பீவீ 73929
*கம்பனியின் பதிவுத் திகதி :* 2010.08.25
*கம்பனியின் பதிவு விலாசம் :* இல. 141/3, வெக்ஷோல் வீதி, கொழும்பு 2

ஷார்ட் பிசினஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2010.09.18.

12-240

## அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப் படுகின்றது :-*

*கம்பனியின் பெயர் :* எஸ். எம். சந்திரசேன பௌண்டேஷன்
*கம்பனியின் பதிவு இலக்கம் :* ஜீஏ 2383
*கம்பனியின் பதிவுத் திகதி :* 2010.04.30
*கம்பனியின் பதிவு விலாசம் :* மாத்தளை சந்தி, குருந்தன்குளம, அனுராதபுரம்

குரூப் மெனேஜ்மென்ட் அன்ட் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிடெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2010.09.18.

12-241

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : மஹாரிஷி இன்ஸ்டிடியூட் ஒப் எட்வான்ஸ் டெக்னொலொஜி (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 74377
*கம்பனியின் பதிவுத் திகதி* : 2010.09.16
*கம்பனியின் பதிவு விலாசம்* : இல. 42/9, ரொஸ்மீட் இடம், கொழும்பு 7

ஷார்ட் பிசினஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வெக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2010.09.18.

12-242

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப் படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : ஜட் என்ஜினியர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 74043
*கம்பனியின் பதிவுத் திகதி* : 2010.08.31
*கம்பனியின் பதிவு விலாசம்* : இல. 116, சேர்குளர் வீதி, மாபனவத்துற வீதி, கண்டி

குரூப் மெனேஜ்மென்ட் அன்ட் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வெக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2010.09.18.

12-243

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப் படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : இந்ரா எக்ரிசேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 73811
*கம்பனியின் பதிவுத் திகதி* : 2010.08.17
*கம்பனியின் பதிவு விலாசம்* : இல. 116, சேர்குளர் வீதி, மாபனவத்துற வீதி, கண்டி

குரூப் மெனேஜ்மென்ட் அன்ட் செக்ரடேரியல் சேர்விசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வெக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2010.09.18.

12-244

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என அறிவிக்கப் படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : றோயல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 75126
*கம்பனியின் பதிவுத் திகதி* : 2010.10.28
*கம்பனியின் பதிவு விலாசம்* : இல. 592, தெனிமுல்ல, ஹெய்யன் துடுவ

ஷார்ட் பிசினஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வெக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2010.11.03.

12-245

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 9(1) இன்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : சவுத் ஒப் இங்க்லண்ட் பீ அன்ட் ஐ க்ளப் எசோசியேஷன் ஒப் லங்கா
*கம்பனியின் பதிவு இலக்கம்* : ஜீஏ 2415
*கம்பனியின் பதிவுத் திகதி* : 2010.07.15
*கம்பனியின் பதிவு விலாசம்* : இல. 419 3/1, காலி வீதி, கொழும்பு 3

ஷார்ட் பிசினஸ் சிஸ்டம்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வெக்ஷோல் வீதி,
கொழும்பு 2,
2010.09.18.

12-246

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழான அறிவித்தல்**

*கம்பனியின் பெயர்* : சிறிசிப் ஹோல்டிங்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 75129
*கம்பனியின் பதிவுத் திகதி* : 2010, நவெம்பர் 1
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட முகவரி* : இல. 125/7, 3 ஆம் குறுக்குத் தெரு, கெஹான் வீதி, தலங்கம கிழக்கு, கொஸ்வத்தை

பணிப்பாளர்.

இல. 240/4, ஜூப்ளி போஸ்ட்,
கோட்டை வீதி,
நுகேகொடை.

12-235

---

**வியாபார ஸ்தாபனம் கூட்டிணைப்பு அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் 9(1) ஆம் பிரிவுக்கிணங்க கீழ்க்குறிப்பிட்ட வியாபார ஸ்தாபனமானது 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 28 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டதை அறியத் தருகிறோம்.

*வியாபார ஸ்தாபனத்தின் பெயர்* : வரையறுக்கப்பட்ட டெப்ரோபேன் சொத்துக்கள், காணி விற்பனை ஆகியவைகள்
*வியாபார ஸ்தாபன இலக்கம்* : பீபி 3849
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 3/4, கல்கந்த வீதி, அனிவத்தை, கண்டி

எச். நதி,
ஸ்தாபனத்தின் செயலாளர்.

12-159

---

**அற்றோணி தத்துவத்தை இரத்துச் செய்தல்**

கொழும்பு 15, மோப்ரே ஒழுங்கை, இலக்கம் 34/5பி இல் குடியிருக்கும் தாசியஸ் ஆன் ரிபொலிட்டா கொடிலியா ரவீந்திரநாதன் ஆகிய நான், அவிசாவளை பிரசித்த நொத்தாரிசு ஆகிய டபிள்யூ. ஏ. எம். ஜீ. யூ. குணவர்த்தன அவர்களால் 2005.10.19 ஆந் திகதி எழுதி உறுதி செய்யப்பட்ட இல. 15430 மற்றும் கொழும்பு பதிவாளர் அலுவலகத்தின் அற்றோணி தத்துவ ஆவணத்தின் 315 ஆவது பிரிவின் 28 ஆம் பந்தியில் ஆவண இலக்கம் 16878 இன்கீழ் 2005.11.25 ஆந் திகதி பதிவுசெய்யப்பட்ட அற்றோணி தத்துவப்பத்திரம் மூலமாக கொழும்பு 15, மோப்ரே ஒழுங்கை, இலக்கம் 34/5பி இல் குடியிருக்கும் சின்னையா சந்திரசேகரன் என்பவருக்கு வழங்கப்பட்டிருந்த அற்றோணி தத்துவத்தை அதிகாரமற்றதாக்கி இரத்துச்செய்வதாக பிரகடனப் படுத்துவதோடு இதன் பிறகு அவரால் செய்யப்படும் எந்த செயற்பாடுகளுக்கும், அதிகாரங்களுக்கும் உறுதியெழுப்பும் விடயங்களுக்கும் அவருக்காக நான் பொறுப்பாக இருக்கமாட்டேன் என பிரகடனப்படுத்துகிறேன்.

தாசியஸ் ஆன் ரிபொலிட்டா கொடிலியா ரவீந்திரநாதன்.

12-297

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 9(1) இன்கீழ் பொதுமக்களுக்கு விளக்கப்படுகின்ற அறிவித்தல்**

கீழ்குறிப்பிடப்படும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகிறோம் :-

*கம்பனியின் பெயர்* : கிறீன் எயார்கொன் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 75463
*கூட்டிணைக்கப்பட்ட திகதி* : 2010, நவெம்பர் 11.
*பதிவுசெய்யப்பட்ட அலுவலகம்* : இல. 315, ஜயந்த வீரசேகர மாவத்தை, கொழும்பு 10

பணிப்பாளர்.

12-343

---

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவு 346(1) இன்கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்**

ஸ்ரார் ஷிப்பிங் லிமிட்டெட்

**கம்பனியின் பதிவு இல. : பீபி 461**

கொழும்பு 4, காசல் வீதி, இல. 2, 4 ஆம் மாடியில் அமைந்துள்ள எஸ்ஜேஎம்எஸ் அசோசியேட்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பீ. ஈ. ஏ. ஜெயவிக்கிரம மற்றும் ஜீ. ஜே. டேவிட் ஆகிய நாம், கொழும்பு 2, வொக்ஷோல் வீதி, இல. 140, ஏஈசீ கட்டிடம், 2 மாடியிலுள்ள ஸ்ரார் ஷிப்பிங் லிமிட்டெட் கம்பனியின் 2010, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற அதனது அதிவிசேட பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி மேற்படி கம்பனியின் கலைப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளோம் என்பதை சகலருக்கும் அறியத்தருகிறோம்.

பீ. ஈ. ஏ. ஜெயவிக்ரம மற்றும் ஜீ. ஜே. டேவிட்,
கலைப்பாளர்கள்,
ஸ்ரார் ஷிப்பிங் லிமிட்டெட்.

மே./பா. எஸ்ஜேஎம்எஸ் எசோசியேட்ஸ்,
ரீஸ்ட்ரக்ஷர் அன்ட் கோர்ப்பரேட் ரிகவரி,
லெவல் 4, இல. 2, காசல் லேன்,
கொழும்பு 4,
2010.11.11.

12-342/1

## 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்ட அறிவித்தல்

ஸ்ரார் ஷிப்பிங் லிமிட்டெட்

**கம்பனியின் பதிவு இல. : பீபி 461**

இத்தால் சகலருக்கும் அறியத்தருவது யாதெனில், 2010, நவெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற மேற்படி கம்பனியின் அதிவிசேட பொதுக் கூட்டத்தில் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டப்பிரிவு 319(1) (பி) இன் கீழ் மேற்படி கம்பனியை அங்கத்தவர்களின் 'தன்னிச்சையான ஒடுக்குதல்' மூலம் 2010, நவெம்பர் 11 ஆந் திகதி முதல் கலைப்பதற்கான விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

ஏ. சீ. விஜேநாதன்,
ஏ. எம். ஆர். அபேரத்ன,
டீ. எஸ். பீ. எஸ். டி சில்வா,
டீ. சீ. ஆர். அபேரத்ன,
என். பீ. பி. றஞ்சிகொட,
பணிப்பாளர்கள்.

2010, நவெம்பர் 11.

12-342/2

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டவிதியின் 9 ஆம் பிரிவின் நியமங்களுக்கு ஏற்ப கல்சரல் ஹெறிரேஜ் (பிறைவேட்) லிமிட்டெட் 2010, ஒற்றோபர் 8 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டது பற்றிய அறிவித்தல் இத்தால் தரப்படுகிறது :-

*கம்பனியின் பெயர்* : கல்சரல் ஹெறிரேஜ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 74712
*கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி* : "ஜெற்விங் ஹவுஸ்", இல. 46/26, நவம் மாவத்தை, கொழும்பு 2

சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசஸ் லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

12-317

---

## புக்கிற் டாறா பீஎல்சீ - பிகியூ 56

கம்பனியின் பரிந்துரைக்கப்பட்ட பங்கு உட்பிரிவினை 2010, மார்கழி 21 ஆந் திகதி முன்னெடுக்கப்படுவதால், கம்பனியின் பங்குப் பதிவுப் புத்தகங்கள் 2010, மார்கழி 21 ஆந் திகதி முதல் 2010, மார்கழி 23 ஆந் திகதி வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட பங்கு உட்பிரிவினை, வெள்ளிக்கிழமை 2010, மார்கழி 17 ஆந் திகதி நடைபெறவுள்ள விசேட பொதுக் கூட்டத்தில் பெறப்படும் கம்பனியின் பங்காளர்களது ஒப்புதலுக்கு அமைவானது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

புக்கிற் டாறா பீஎல்சீ,
காசன்ஸ் மனேஜ்மன்ட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 61, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1,
2010, மார்கழி 10.

12-315/2

---

## காசன்ஸ் கம்பபச் பீஎல்சீ - பிகியூ 41

கம்பனியின் பரிந்துரைக்கப்பட்ட பங்கு உட்பிரிவினை 2010, மார்கழி 21 ஆந் திகதி முன்னெடுக்கப்படுவதால், கம்பனியின் பங்குப் பதிவுப் புத்தகங்கள் 2010, மார்கழி 21 ஆந் திகதி முதல் 2010, மார்கழி 23 ஆந் திகதி வரை (இரு நாட்களும் உட்பட) மூடப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகிறது. மேற்குறிப்பிடப்பட்ட பங்கு உட்பிரிவினை, வெள்ளிக்கிழமை 2010, மார்கழி 17 ஆந் திகதி நடைபெறவுள்ள விசேட பொதுக் கூட்டத்தில் பெறப்படும் கம்பனியின் பங்காளர்களது ஒப்புதலுக்கு அமைவானது.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

காசன்ஸ் கம்பபச் பீஎல்சீ,
காசன்ஸ் மனேஜ்மன்ட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

இல. 61, சனாதிபதி மாவத்தை,
கொழும்பு 1,
2010, மார்கழி 10.

12-315/1

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவிற்கமைய கீழ்வரும் கம்பனி 2010, ஒற்றோபர் 5 ஆந் திகதி முதல் பெயர் மாற்றப்பட்டுள்ளது :-

*பழைய பெயர்* : கொன்பிபி பீச் ஹோட்டல்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*புதிய பெயர்* : கொன்பிபி இன்வெஸ்ட்மென்ட் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் இலக்கம்* : பீவீ 15127
*பதிவு முகவரி* : இல. 33, சென். மைக்கல்ஸ் வீதி, கொழும்பு 3

கொன்பிபி மெனேஜ்மென்ட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

12-302

### கம்பனியின் பெயர் மாற்றத்திற்கான அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவிற்கமைய கீழ்வரும் கம்பனியின் பெயர் 2010.10.25 ஆந் திகதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம் :-

பழைய பெயர் : கொன்பிபி வோட்டர் ஸ்போட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

புதிய பெயர் : கொன்பிபி கெபிட்டல் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 19369
முகவரி : இல. 33, புனித மைக்கல் வீதி, கொழும்பு 3

கொன்பிபி மெனேஜ்மென்ட் சேர்விசஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
செயலாளர்கள்.

12-301

## ஏல விற்பனைகள்

### பிரதேச அபிவிருத்தி வங்கி – எல்பிட்டிய கிளை

(முன்னர் றுஹுனு அபிவிருத்தி வங்கி என அறிமுகம் செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள் ஏல விற்பனை**

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2010.12.28 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் காலி மாவட்டத்திலே பென்தர வலல்லாவிட கோரலேயின் (கிழக்கு) படுவன்ஹேன என்ற ஊரில் அமைந்துள்ள அதிகாரம்பெற்ற திரு. எஸ். கொடிகார அவர்களினால் 1999.09.15 ஆந் திகதியில் அளந்து ஒழுங்குசெய்யப்பட்ட முஜிகா 2939 என்ற வரைபடத்தில் காட்டப்பட்ட இகல்கந்த வத்த என்ற காணியைப் பிரித்து வேறாக்கப்பட்ட இல. 17 என்ற நிலத்துண்டில் இகல்கந்த என்ற (இகல்கந்த வீடமைப்புத் திட்ட) அளவில் சைபர் தசம் சைபர் ஐந்து மூன்று ஹெக்டெயார் (0.053 ஹெக்டெயார்) கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், கட்டிடங்கள் உட்பட அனைத்துமாகும். மேற்கூறப்பட்ட 2939 ஆம் வரைபடத்தில் காட்டப்பட்ட நிலத்துண்டை உபயோகிக்கும் உரிமையும் கொண்டுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2010.06.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 2010.10.08 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- எல்பிட்டிய எண்ணெய் நிரப்பும் நிலையத்திற்கு எதிரே உள்ள வீதியில் செல்ல இஹலகொடைக்கு செல்லும் பாலம் தென்படும். அங்கிருந்து வலப்பக்கமாக உள்ள வழியில் சற்று தூரம் சென்றதும் இடப்பக்கமாக உள்ள பாதைக்கு எல்லையாக இக்காணி அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வனவாளரினால் இறுதியில் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக மாகாண அதிகாரிக்கு விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2 % ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புறன, அனகாரிக தர்மபால மாவத்தையின் இல. 382ஏ என்ற நிலையத்தில் அமைந்துள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் தென் பிராந்திய அலுவலகத்தில் முகாமையாளர்" இற்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இல. : 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731.

12-162/1

---

### பிரதேச அபிவிருத்தி வங்கி – திஸ்ஸமஹாராம கிளை

(முன்னர் றுஹுனு அபிவிருத்தி வங்கி என அறிமுகம் செய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கியினால் வழங்கப்பட்ட கடன் அறவிடல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் அதிகாரத்தின் கீழ் விற்பனை அறிவித்தல்

**சொத்துக்கள் ஏல விற்பனை**

பிரதேச அபிவிருத்தி வங்கியினால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2010.12.30 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு இங்கு கீழ்க்கண்ட விபரங்களைக் கொண்ட சொத்துக்கள், சொத்துக்கள் அமைந்துள்ள

இடத்திலேயே என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

**ஈடுவைக்கப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரணம்.**- தென் மாகாணத்தின் ஹம்பாந்தோட்டை மாவட்டத்திலே மாகம்பத்துவெ லுனுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவின் பராக்ரமபுர வம்இவுற குடாகம்மான 3 என்ற ஊரில் அமைந்துள்ள சர்வே ஜெனராலினால் ஒழுங்குசெய்யப்பட்ட இல. 2 என்ற வரைபடத்தின் இலக்கம் 2749 எனக் காட்டப்பட்ட அளவில் சைபர் தசம் இரண்டு ஹெக்டெயார் (0.2 ஹெக்டெயார்) கொண்ட மிகப்பெரிய காணியில் பயிர்ச்செய்கை, பழவர்க்கங்கள், கட்டிடங்கள் உட்பட அனைத்துமாகும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2010.06.24 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும், 2010.10.12 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "த ஐலண்ட்" ஆகிய பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்ட ஏலவிற்பனைப் பகுதியைக் கவனிக்க.

**சொத்துக்களுக்கு பிரவேசித்தல்.**- திஸ்ஸமஹாராம பெரலிஹெல பாதையில் 5 கி. மீ. அளவு செல்ல பாதையின் வலப்பக்கமாக இச்சொத்துக்கள் அமைந்துள்ளதைக் காணலாம்.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- வெற்றிபெற்ற கொள்வன வாளரினால் இறுதியில் கீழ்க்கண்டபடி பணமாகச் செலுத்தல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) மாகாண அதிகாரியின் வரியாக விற்பனை விலையில் 1% ;
(3) ஏலவிற்பனையாளர் தரகு என விற்பனை விலையில் 2 1/2 % ;
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமாக ரூபா 500 ;
(5) விற்பனைச் செலவும் வேறு கட்டணமும் இருப்பின் அப்பணமும் ;
(6) விற்பனை உறுதிப்பத்திரத்திற்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையில் மீதி 90%க்கான பணத்தை விற்பனைத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "மாத்தறை, பம்புறுன, அனகாரிக தர்மபால மாவத்தையின் இல. 382ஏ என்ற நிலையத்தில் அமைந்துள்ள பிரதேச அபிவிருத்தி வங்கியின் தென் பிராந்திய அலுவலகத்தில் முகாமை யாளர்" இற்கு செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டபடி குறிப்பிட்ட பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறினால் தற்போதைக்கும் கொள்வனவு விலையில் செலுத்திய 10% க்கான பணத்தை திரும்பவும் செலுத்தாது மீண்டும் அச்சொத்துக்களை விற்பனை செய்யவும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை கோரும் ஒப்பினையையும் வேறு குறிப்பிட்ட விபரங்களையும் மேலுள்ள முகவரியில் பெறலாம். தொலைபேசி இல. : 041-2231532, 2226208, 2226209.

ஜீ. பீ. ஆனந்த (சமாதான நீதவான்),
அதிகாரம்பெற்ற ஏலவிற்பனையாளர்,
நீதிமன்ற ஆணையாளர், மதிப்பீட்டாளர்.

குருந்துவத்த,
வல்கம,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2228731.

12-162/2

**மக்கள் வங்கி – சுதுவெல்லை கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29டி ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**காணி (கிழக்கு மாகாணம், மட்டக்களப்பு மாவட்டம், கல்குடா கோறளையில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவை யாளர் கே. இரட்ணராஜா அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1980.12.31 ஆந் திகதியிடப்பட்ட பிரிக்கப்பட்ட வரைபடம் இல. கே.49 இல் குறிப்பிடப்பட்டு துண்டு 7 என அடையாளமிடப் பட்டதுமான) அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : ஐந்து ஏக்கர் (5ஏ. 0றூ. 0பே.))**

**இப்பிரிக்கப்பட்ட மத்திய பாக காணியின் விஸ்தீரணம் : இரண்டு ஏக்கர் (2ஏ. 0றூ. 0பே.)**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- விபுலானந்தர் மாவத்தை வழியே ஏறக்குறைய 1 மைல் செல்ல வாழைச்சேனை மக்கள் வங்கிக்கு அண்மையில் அமைந்துள்ளது. கல்குடா வீதி வழியே ஏறக்குறைய 1 1/4 மைல் செல்ல பிரதான இராணுவ முகாமும் சுற்றுலா சபை வீதியும் இருக்கின்றது. ஏறக்குறைய 200 மீற்றர் செல்ல, விற்பனைக்குரிய இவ்வாதனம் இடப்பக்கத்தில் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2010.12.27 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2010.11.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2009.11.03 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின" மற்றும் "தினகரன்" ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விற்பனை விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதெனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 1, டியூக் வீதி, இல. 11, மக்கள் வங்கி (மேற்கு 01), உதவிப் பொது முகாமையாளர்" அவர்களிடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 2387068, 2344982, 2344983 ; தொலைநகல் இல. : 011-4717008.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்
மற்றும் விலைமதிப்பிடுநர்.

அலுவலகம் :
25பி, பெல்மொண்ட் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-5756356, 011-2334808.

இல்லம் :
11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. : 011-2419126, 011-8760986.

12-337

---

**மக்கள் வங்கி – கண்டி கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கி சட்டத்தின் 29டி ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

**குறிப்பிட்ட காணித்துண்டு (மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், பேராதனை வீதி தற்போது சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தையில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. கே. எம். எம். வெலிவிட்ட அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டு 1975.02.11 ஆந் திகதியிடப்பட்ட பிரிக்கப்பட்ட வரைபடம் இல. 231 இல் துண்டு 3 என குறிப்பிடப்பட்டதுமான காணி) அதன்கண் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் எல்லாவற்றுடனும் சேர்த்து ஏல விற்பனை**

**(காணியின் விஸ்தீரணம் : நான்கு தசம் எட்டு சைபர் பேர்ச்சுக்கள் (0ஏ. 0றூ. 4.80பே.))**

**ஆதனத்திற்கு உட்பிரவேசிக்கும் வழி.**- இவ்வாதனம் கண்டி, பேராதனை வீதி, வரிமதிப்பு இல. 215 தற்போது பண்டாரநாயக்க மாவத்தை, வரிமதிப்பு இல. 399 இல் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ் மேற்குறிப்பிடப்பட்ட ஆதனத்தை 2010.12.26 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு அதே இடத்தில் நான் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்வேன்.

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2010.10.22 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2010.10.11 ஆந் திகதிய ''டெய்லி நியூஸ்'', ''தினமின'' மற்றும் ''தினகரன்'' ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெறும் கொள்வனவாளர் ஏலமுடிவில் பின்வரும் தொகைகளை காசாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய உள்ளூர் அதிகார சபை வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகு கொள்வனவு விலையின் 2 1/2 % (இரண்டரை வீதம்) ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500 ;
(5) விற்பனை செலவு மற்றும் வேறேதேனும் கட்டணங்கள் (எவையேனுமிருப்பின்) ;
(6) விற்பனை சான்றிதழுக்கான முத்திரைக் கட்டணம்.

கொள்வனவு விலையின் மிகுதி 90% (தொண்ணூறு வீதம்) ஐ விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் ''கண்டி, பிரதேச தலைமை அலுவலகம், மக்கள் வங்கி'' யில் கொள்வனவாளரால் வைப்பிலிடப்படல் வேண்டும். தொலைபேசி இல. : 081-2234283 ; தொலைநகல் இல. : 081-2223017.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆவணங்களையும் மேற்கூறப்பட்ட முகவரியில் பெற்றுக்கொள்ளலாம்.

சொல்லப்பட்ட எஞ்சிய தொகை மேற்குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% (பத்து வீதம்) ஐ தண்டப்பணமாக அறவிடவும் ஆதனத்தை மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரமுண்டு.

ஈ. எஸ். ராமநாயக்க,
(தீவு முழுவதுக்குமான சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவுபெற்ற ஏலதாரர்
மற்றும் விலைமதிப்பிடுநர்.

அலுவலகம் :
25பி, பெல்மொண்ட் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி இல. : 011-5756356, 011-2334808.

இல்லம் :
11/55, குடாபுத்கமுவ,
அங்கொடை.
தொலைபேசி இல. : 011-2419126, 071-8760986.

12-340

---

**மக்கள் வங்கி – செங்கலடி கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் விற்பனை*

**பெறுமதிவாய்ந்த அரிசி ஆலை ஏல விற்பனை**

**ஆதனத்திற்குச் செல்லும வழி.**- மட்டக்களப்பு நகரத்திலிருந்து ஆரம்பித்து மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியின் வழியாக சுமார்

29 கிலோ மீற்றர்கள் சென்று கிரான் பிரதான வீதியில் கூட்டுறவுச் சங்கத்தை அடைந்து அக்கூட்டுறவு சங்கத்திற்கு அருகில் வலதுகைப் பக்கத்தில் செல்லும் வீதியில் 60 மீற்றர் தொலைவில் வலப்பக்கத்தில் இக்குறிப்பிட்ட ஆதனம் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின்படி கிரான் பிரதான வீதியில் அமைந்துள்ள பெறுமதி வாய்ந்த அரிசி ஆலை அதே இடத்தில் 2010.12.19 ஆந் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.00 மணியளவில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வுள்ளது.

**மேலதிக விபரங்களுக்கு**.- 2004.09.03 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியிலும் 2004.08.18 ஆந் திகதிய "தினகரன்" மற்றும் "டெய்லி நியூஸ்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்**.- உத்தேசக் கொள்வனவாளர் ஏலத்தின் முடிவில் உடனடியாக-

(1) கொள்வனவு விலையின் 25% (இருபத்தைந்து வீதம்) ;
(2) ஏலதாரரின் கட்டணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்) ;
(3) உள்ளூர் வரியாக 1% (ஒரு வீதம்) ;
(4) வேறு கட்டணங்கள் ஏதும் இருப்பின் அவற்றையும் அதே இடத்தில் உடன் ரொக்கமாகச் செலுத்த வேண்டும்.

கொள்வனவு விலையின் மீதி 75% வீதத்தை விற்பனைத் திகதியில் இருந்து 30 தினங்களுக்குள் மக்கள் வங்கி செங்கலடி கிளையில் செலுத்த வேண்டும். மேற்குறிப்பிட்டவாறு 30 தினங்களுக்குள் மக்கள் வங்கி செங்கலடி கிளையில் செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு 30 தினங்களுக்குள் செலுத்தத் தவறின் செலுத்திய முற்பணம் யாவற்றையும் இழக்க நேரிடுவதோடு மீண்டும் அவ்வாதனத்தை விற்பனை செய்ய வங்கிக்கு உரிமையுண்டு.

உரித்து உறுதிகளையும் மேலதிக விபரங்களையும் மட்டக்களப்பு மக்கள் வங்கி பிரதேச தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. : 065-2222652.

ஏ. ஈ. கே. திசவீரசிங்க,
அதிகாரமளிக்கப்பட்ட ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 8, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

12-283

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.